# சமூக மேன்னிலையாக்கமும் வீட்டுக் கட்டடக்கலையும் : யாழ்ப்பாணத்து வீட்டு முகப்புக்கள் 1870 – 1940

**பாக்கியநாதன் அகிலன்**
முதுநிலை விரிவுரையாளர் கலைவரலாறு
நுண்கலைத்துறை,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வாழும் முறைகளின் பௌதீக உற்பத்தியாகவும், பண்பாட்டு மோதுகைகளினதும் அதேநேரம் பண்பாட்டினைக் கட்டமைக்கும் செயற்பாடுகளை உடையதாகவும் கட்டடங்கள் உள்ளன.

(லோங், தேசாய் மற்றும் தேசாய் 2000 : 03)

வீடுகள் தாம் வாழும் சமூகத்தின் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டு நிலபரங்களின் குறிகாட்டியாகவுள்ள அதேவேளை, வீட்டு உரித்தாளரது சமூக இருக்கை நிலையின் காண்பிய நிலைப்பட்ட பிரதிநிதித்துவமாயும் உள்ளன. அவ்வகையில் அவை கட்டுமான ரீதியானவொரு வரலாற்றுச் சாட்சியமாகவும், கட்டுமான நிலைப்பட்ட சூழலாகவும் (built environment) உள்ளன. அந்த வகையில் சமூக அசைவியக்கங்கள் யாவற்றினதும் பதிவுப் பிரதிகளாகவும் அவை காணப்படுகின்றன. அந்த வகையில் வீடுகளை வாசிப்பது என்பது குறிப்பிட்ட சமூகத்தையும், அதன் உறுப்பினர்களையும் அவர்களது சமூக பொருளாதார அரசியல் பண்பாட்டு பகைப்புலத்தில் நிறுத்தி வாசிப்பதாகக் காணப்படுகிறது.

அந்த வகையில் சமூக மேல்நிலையாக்கத்தினை வாசிப்பதற்கான பண்பாட்டுச் சுட்டிகளுள் ஒன்றாகவும் வீடுகள் காணப்படுகின்றன. என்பதனால் வீட்டிற்கான கட்டுமான ஊடகங்கள், பாணி (style) ரீதியான மாற்றங்கள் மற்றும் அளவுத்திட்டங்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள், வெளியைப் பிரையோகிக்கும் முறைகள் அதன் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் விலக்குகள் (taboos) என்பன இவ்வகையில் மேற்படி சமூக மாற்றங்களை கோடி காட்டி நிற்கும் கட்டுமான அலகுகளாகும்.

அந்த வகையில் 1870 க்கும் 1940 க்கும் இடைப்பட்ட கால கட்ட யாழ்ப்பாணத்து வீட்டு முகப்புக்கள் என்பது மேற்படி சமூக பொருளாதாரப் பண்பாட்டு அசைவியக்கத்தினின் ஒரு காட்சித் தடையமாக காணப்படுகிறது என்பதுதான் இக்கட்டுரை எடுத்துக்காட்ட விரும்புகின்ற விடயமாகும்.

யாழ்ப்பாணத்தில் வீடென்பது வெறும் கட்டுமானமல்ல எனவும், பதிலாக வீடு அதனைச் சுற்றியுள்ள '*வளவு*' எனும் வேலியால் எல்லையிடப்பட்ட வெளியுடனும், கிணறு, மந்தைகளுக்கான '*கொட்டில்*' எனப்படும் கொட்டகை முதலியவற்றுடனும் கூடிய ஒரு தொகுதிப் பரப்பாகும் எனவும் சிவத்தம்பி அவர்கள் வாதிடுவார் (சிவத்தம்பி 2002). மேற்படி வீட்டுப் பரப்புக்குள் நுழைவதற்கான கூரையுடைய வாயிலமைப்பு '*சங்கடப்படலை*' என அழைக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரை வீட்டு கட்டடக் கலை தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற கட்புலத் தடயங்கள் மேற்கத்தைய காலனிய காலத்திற்கு உட்பட்டவையாகவே பெரிதும் காணப்படுகின்றன. பொதுவாக 18ஆம் நூற்றாண்டில் இருந்து இவை தொடர்பான சான்றாதாரங்கள் எமக்குக் கிடைக்கப்பெறுகின்றன. யாழ்ப்பாணத்தினுடைய வீட்டுக்கட்டடக்கலை பற்றிய ஆய்வுகள் (மயூரநாதன் 2002, குணசிங்கம் 1986 அகிலன் 1997, 2006) யாழ்ப்பாண வீட்டுக்கட்டட கலையினுடைய பரிணாம நகர்ச்சியினை பின்வருமாறு கட்டமைக்கின்றன.

1. ஓரலகு வீடுகள் : '*தாயறை*' அல்லது '*வீடு*' எனப்படும் ஒற்றை அறையை உடைய கட்டமானம். இது *திண்ணை*, அவற்றிற்கு இடைப்பட்ட *நடை* ஆகியவற்றோடு கூடிய பெரும்பாலும் மண்ணாலும் பின்னர் சுண்ணாம்பு முதலியவற்றாலுமான பனையோலை அல்லது தென்னோலை கொண்டு வேயப்பட்ட ஒரு கட்டமானமாக இருக்கும்.
2. ஈரலகு வீடுகள் : மேற்படி '*வீடு*' என்கின்ற கட்டுமானத்துடன் '*குசினி*' எனப்படும் அடுக்களையை இன்னொரு அலகாகக் கொண்ட கட்டுமான அமைப்புகள். இவ்வலகும் வீடு போன்ற உருவமைப்பைக் கொண்டிருக்கும் அதேவேளை, அளவில் சிறியதாக இருக்கும்.
3. மூவலகு வீடுகள்: இது முக்கியமான ஒரு காலகட்டம். காலனிய கால நிலப் பிரபுத்துவத்தின் பிரதான விளைவாக இக் காலகட்டம் காணப்பட்டது. மேற்படி 'வீடு', 'குசினி' ஆகிய கட்டமைப்புகளுடன், பிறிதான '*மால்*' அல்லது '*தலை வாசல்*' எனும் வரவேற்புக் கூடம் ஒன்றைத் தனியாகக் கொண்ட அமைவாகக் காணப்பட்டது.
4. முன் நாற்சாரக் கட்டடக்கலை : இந்த அமைவானது மேற்படி மூவலகு வீடுகள் நெகிழ்வான முறையில் தம் கட்டுமானங்களுக்கிடையிலான பௌதீக வெளியை அடைத்து அவற்றுக்கு நடுவில் ஒரு உள்முற்றம் உருவாகுமாறு கட்டமைத்துக் கொள்ளும் ஒரு கட்டமாகும். இதனை மூவலகிலிருந்து நாற்சாரத்துக்கான இடைமாறு கால கட்ட வீட்டுக்கட்டட அமைவாகவும் காணமுடியும்.
5. பாரம்பரிய நாற்சார கட்டடக்கலை : நடு உள் முற்றம் ஒன்றை அடிப்படை அலகாகக் கொண்டு '*வீடு*' அல்லது '*தாயறை*', '*குசினி*', '*தலைவாயில்*' என்பவற்றைச் சேர்த்திணைத்த 'திண்ணை', 'நடை' உள்ளிட்ட பாரம்பரிய அலகுகளுடன் கூடிய கட்டடக்கலை அமைவு.
6. காலனிய நாற்சார வீட்டக்கட்டடக்கலை : இது பாரம்பரியமான நாற்சார வீட்டுக்கட்டமைப்புக்குள் மேற்கத்தேய வகையிலான கட்டட வகைகளை உள்ளெடுத்து ஒரு கலப்பொட்டு வடிவமாக உருவாகிய கட்டுமானமாகும். இக் கட்டுமானங்கள் சில வேளைகளில் இரண்டு உள்முற்றங்கள் உடையதாகி இணைக்கப்பட்ட இரண்டு நாற்சாரங்கள் போன்ற அமைப்பைப் பெறும் போது அவை எட்டுச்சார வீடுகள் என்றும் அழைக்கப்பட்டன.
7. ஒல்லாந்த பாணி வீடுகள் : மேற்படி வீடுகள் ஒல்லாந்த 17, 18 ஆம் நூற்றாண்டு வீட்டுக்கட்டட அமைவுகளை அதிகம் பின்பற்றிக் கட்டப்பட்டவை.

8. ட,ப வடிவ வீடுகள் : இவை பெரும்பாலும் ஓரலகு, ஈரலகு, மூலவகு வீடுகளை இணைக்கும் முறைமையினால் ஏற்பட்ட வேறுபட்ட வடிவமைப்புடைய கட்டடங்கள் ஆகும்.

முகப்புகள் (Facade) என்பது ஒரு வகையில் கட்டடம் பொது வெளிக்குத் தன்னை அறிமுகம் செய்யும் ஒரு கட்டமைப்பாகும். இன்னொரு வகையில் சொன்னால் வீட்டு உரிமையாளர்களது வர்க்க மற்றும் பண்பாட்டு நிலைவரங்களை எடுத்துரைப்பதுமாகும். அந்த வகையில் வீட்டு முகப்புக்கள் என்பன சமூக அந்தஸ்தினதும், மேன்நிலை ஆக்கத்தினதும் மிக முக்கியமான வரலாற்றுச் சுட்டியாகக் காணப்படுகிறது.

பாரம்பரியமான யாழ்ப்பாண வீட்டுக் கட்டட முகப்பு என்பது *திண்ணையுடன்* கூடிய, தாழ்ந்த கூரையமைவுடைய உள்நுழைவதற்கான *நடையுடன்* கூடிய ஓர் அமைவாகும். அதன் கதவுகளும் பெருமளவுக்குக் குட்டையாகக் காணப்படும்.

ஆனால், யாழ்ப்பாணத்தில் 16ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரேற்பட்ட போத்துக்கீச, ஒல்லாந்த, ஆங்கிலேய காலப் பண்பாட்டுச் செல்வாக்குகள் ஊடாக பாரம்பரிய முகப்பு அமைப்பில் ஏற்படுகின்ற மாற்றம் என்பது காலனிய யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் ஏற்பட்ட சமூக பண்பாட்டு மாற்றங்களில் ஏற்பட்ட மாற்றத்தின் உரை கல்லாகக் காணப்பட்டது. பாரம்பரியமான கட்டட அமைவுகளுடன் இணைவுற்றதான ஒரு நிலைக்குத்தான ஒரு முகப்பு அமைவினை யாழ்ப்பாண வீடுகள் புதிதாக ஏற்றுக் கொண்டன. மேற்படி இந்த முகப்பு அமைவு என்பது மேற்கத்தேய அடித்தளத்தை உடையது ஆயினும், அது இணைக்கப்பட்ட முறையிலும், அதன் அளவுத் திட்டதிலும் அதன் மேற்கத்தேய முறைகளினை மாற்றியமைத்தல் ஊடாகவும் அது யாழ்ப்பாணத்துக்கு உரியதாக தகவமைக்கப்படுகிறது என்பது வரலாற்று ரீதியாக முக்கியத்துவமுடையவொன்றாகும். அந்த வகையில் மேற்படி முகப்புக்கள் அக் காலகட்ட ஐரோப்பாவில் புகழ்பெற்றிருந்த பாரூக் (Baroque) எனும் பாணியை அடியொற்றி அமைந்தனவாகக் பெரிதும் காணப்படுகிறன.

ஐரோப்பாவில் 16 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட ஒரு செல்வாக்கு மிக்க பாணியான பாரூக் அடிப்டையில் ஒரு ரோமானிய கட்டடப் பண்புகளுக்கு மேலாக கட்டப்பட்டதாகவும் அவ்வகையில் மேற்கத்தேய செந்நெறிப்பண்புகளை அதிகம் உள்வாங்கிய ஆடம்பரமான, படோபகரமான ஒரு கட்டுமான அமைப்பாக விருத்தியுற்றது. இது தான் உருவாகிய காலகட்டத்திலேயே ஐரோப்பா முழுவதும் பரந்து, அந்தந்தப் பிரந்தியங்களுக்குரிய பிராந்திய வேறுபாடுகளுடன் நிலைபெற்றிருந்த ஒரு சர்வதேசப் போக்காகக் காணப்பட்டது. அவ்வகையில் போத்துக்கல்லிலும், ஒல்லாந்திலும், இங்கிலாந்திலும் கூட 17ஆம்,18ஆம் நூற்றாண்டுகளில் மேற்படி பாணி ஒரு முதன்மையான பாணியாகப் பயில்வில் இருந்தது (Fichner 2012:375-394). இந் நாடுகள் இப் பாணியை தன்மைமுடைய காலனிய ஆட்சிக்குட்பட்ட நாடுகளுக்கும் விஸ்தரித்துக் கொண்டன. அந்த வகையில் ஆசியாவிற்கும் இதே காலகட்டத்தில் பாரூக் கட்டடக்கலை அறிமுகமாகியது.

இந்த வகையில் இலங்கைக்கும் அதன் பிராந்தியங்களுக்கும் பாரூக் அறிமுகமாகியது. பெரும்பாலான காலனிய கால கிறிஸ்தவ தேவாலய முகப்புக்கள் மேற்படி பாணியைப் பின்பற்றி அமைந்திருப்பதை இன்றைக்கும் காணமுடிகிறது. இவற்றின் தொடர்ச்சியாக கிறிஸ்தவ தேவாலயங்களுடன் கூடிய குருமனைகள் மற்றும் காலனிய அதிகாரிகளது உள்ளூர் அமைவிடங்கள் ஆகியவற்றுக்கும் பயன்படுத்தப்பட்ட இந்தப் பாணி ஆங்கிலக் கல்வி அதன் பொருளாதாரப் பொறிமுறை ஆகியவற்றின் ஊடாக உருவாகிய புதிய உள்ளூர் மேட்டுக்குடியினரது வீடுகளுக்கும் மெல்ல இடமாற்றப்பட்டது. அந்த வகையில் பாரூக் முகப்புகள் என்பன யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை புதிய சமூக பொருளாதார நிலவரங்களால் ஏற்றம் பெற்ற யாழ்ப்பாண மேட்டுக் குடியினரது சமூக மேன்நிலையாக்கம் மற்றும் அந்தஸ்து என்பவற்றின் பிரகடனமாக அவர்களால் கட்டப்பட்ட புதிய வீடுகளில் இணைக்கப்பட்டது எனக் கூறமுடியும்.

காலனியப் பொருளாதார முறைமையால் ஈட்டப்பட்ட உபரிச் செல்வம் இந்தக் கட்டுமானச் சூழலுருவாக்கத்துக்கான பொருளாதார ரீதியான அடித்தளத்தைப் பெரிதும் இட்டது, குறிப்பாக காலனிய நிர்வாக இயந்திரத்தில் பெருமளவுக்கு நிர்ணயகரமாக உத்தியோகங்களில் கடமையாற்றியதால் ஈழத் தமிழர்களால் எய்தப்பட்ட பணம் இதில் மிக முக்கியமானவொரு இடத்தை வகித்தது. குறிப்பாக காலனிய மலேசியாவிற் பணியாற்றிய ஈழத்தமிழர்களது 'மலேசியப் பணம்', புகையிலை வர்த்தகம், கப்பல் வாணிபம் முதலியவற்றால் ஈட்டப்பட்ட உபரிப் பணமே இவற்றுக்கான அடிப்படை முதலீடாகக் காணப்பட்டது: குறிப்பாக 20ஆம் நூற்றாண்டின் முதற் தசாப்தங்கள் மேற்படி உபரி அதிகம் உள்ளூரில் அதிகம் திரண்ட காலமாகக் காணப்பட்டது. மலேயாவில் தொழில் புரிந்த அநேக யாழ்ப்பாணத்தவர் 1930களையொட்டிய ஆண்டுகளில் நாடு திரும்பியதும் தமது செல்வத்தைக் காணி – வீடுகள் என்பனவற்றில் முதலீடு செய்யத் தொடங்கியமையும் இதற்கான பிரதானமான காரணமாகக் காணப்பட்டது. இது ஊடகம், அளவு மற்றும் வடிவமைப்பில் அநேக மாற்றங்களைக் கொணர்ந்தது. இன்னொரு வகையிற் கூறினால் யாழ்ப்பாணத்தில் மண் முதலிய கட்டுமான ஊடகங்களுக்குப் பதிலீடாக கல்லின் வருகையானது வெறுனேயொரு ஊடக மாற்றம் மட்டுமல்ல, பதிலாக புதிய கல் வீட்டுப் பண்பாட்டின் வருகையும் தான். அதனாற்றான் அரை நூற்றாண்டுக்கு முற்பட்ட யாழ்ப்பாணத்தில் 'கல் வீட்டுக்காரர்' என்ற பதம் சமூக அந்தஸ்த்தின் குறியீடாகவே காணப்பட்டது (சிவத்தம்பி 2002)

அதே நேரம் அது இன்று காணக்கிடைக்கின்ற சான்றுகள் அடிப்படையில் பார்க்கும் போது ஊடகம், அளவு என்பனவற்றில் மட்டுமின்றி, அலங்கார காட்டுருக்கள், வடிவமைப்புகளிலும் ஓர் உள்ளூர்வயமாக்கத்தை அல்லது ஒரு வகையான கலப்பொட்டை அவை பிரதிபலிப்பதைக் காணலாம். அவ்வகையில் கஜலக்சுமி, பூரண கும்பம் முதலிய குறியீடுகள் மேற்கத்தேய குறியீடுகளுக்குப் பதிலாக இவற்றில் பதிலீடு செய்யப்பட்டிருப்பதை அல்லது அவற்றுடன் சேர்த்திணைத்துச் செய்யப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். அவ்வகையில் ஜோஸே பெரேய்ரா அவர்கள் தனது 'Baroque India' நூலில் அதனை ஒரு தென் கிழக்காசிய பொருண்மையாகக் காண முடியும். மேலும் அவர் தனது நூலில் தமிழ்நாடுட்பட இந்தியாவின் பல்வேறு பாகங்களிலும் காணப்படும் பரூக் பாணி

நிலைப்பட்ட கட்டுமானங்களை அடையாளப்படுத்தியுள்ளார் (ஜோஸே பெரேய்ரா 2000). அவரது மற்றொரு நூலான 'Baroque Goa'வும் இதே கண்ணோட்டத்தில் கோவாவின் காலனிய காலக் கட்டடங்களை நோக்கியுள்ளது (ஜோஸே பெரேய்ரா 1995). இவற்றை விட மேற்படி பிராந்திய ரீதியான நுண்ணாய்வுப் புலத்தை முன்னிலைப்படுத்திய இன்னொரு நூல் கௌதம் பட்டியா எழுதிய 'Panjabi Baroque' (Panjabi Baroque 1994) ஆகும். இவற்றின் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்து பரூக் என்றவொன்றை எம்மால் இனங்காண முடியும் என்பது தமிழ் கலை பண்பாட்டு வரலாற்று வாசிப்பில் முக்கியமானது.

பொதுவாகத் தமிழ் மரபுரிமை (Tamil heritage) பற்றிய ஜனரஞ்சக உரையாடல்கள் 300 – 400 வருடங்கள் ஐரோப்பிய காலனியத்தின் கீழ் தமிழ்ப் பண்பாடு அடைந்த மாற்றங்களையும் , அதன் தனிக் குணவியல்புகளையும் பெரும்பாலும் கணக்கில் எடுப்பதில்லை. பதிலாக எமது வாசிப்புக்கள் பலவும் தமிழரசர்கால மரபுரிமைகளைக் கொண்டாடுவதோடு பெரிதும் மட்டுப்பட்டு விடுகின்றன. இதனால் தமிழ் மரபுரிமை அல்லது தமிழர் பண்பாட்டு வரலாற்று வாசிப்பில் மிகப் பரந்துபட்ட பிற்பட்ட காலத்தையும், அவற்றின் பிரத்தியேமான குணங்குறிகளையும், அதன் உலகளாவிய பங்களிப்புக்களையும் காணத் தவறி விடுகின்றோம். அந்தவகையில் தமிழ்க் காலனிய கால மரவுரிமைகள் (Colonial Tamil heritage) பற்றிய வாசிப்பு மிக முக்கியமானதாகிறது.

இவ்வகைப்பட்ட நோக்குநிலை நின்று பார்க்கும்போது மேற்படி காலனிய பௌதீகப் பண்பாட்டுப் பேறுகள் தொடர்பிலான ஆய்வுகள் முக்கியத்துவமுடையதாகின்றன. வீட்டு முகப்புக்கள் பற்றிய ஆய்வு அவ்வகைப்பட்ட ஒன்றுதான். அவை நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் பண்பாட்டுக் கட்டுமானத்தில் வாழும் சான்றுகளாக இன்றும் எம்முன்னால் எஞ்சிக் காணப்படுகின்றன. உள்நாட்டு யுத்தம் அழித்தது போக இவற்றில் எஞ்சியிருப்பதை மறைமுகக் கைகொண்டு குறிப்பாக அபிவிருத்தியின் பெயரால் அரசு அழித்து விட முனைவதைப் பரவலாக அவதானிக்க முடிகிறது. இதன் மூலமாக ஓர் இனக் குழுமத்தின் பண்பாட்டு வரலாற்றுச் சான்றாதாரங்களை அழித்து பலவீனப்படுத்த அது முயற்சிக்கிறது. ஆனால், அரசின் திட்டமிட்ட அழிப்புப் பற்றிய உள்ளூர் சமூகத்தின் விழிப்பீனம், அரசியல்வாதிகளது நாட்டமின்மை என்பவற்றோடு இன்றைய யாழ்ப்பாணத்து சமூக நிலைமாற்றங்களின் பின்புலத்தில் உருவாகியுள்ள சமூகக் கருத்துக்களும் அதற்குக் காரணமாகின்றன. அவை மரபுரிமைகளைக் காலங்கடந்ததும், தற்காலத்து நடப்புவழக்கு (Fashion) சார்ந்தவொன்றல்ல என்றும் நம்புகிறது. அல்லது அதனைக் கட்டிக்காத்த பரம்பரைகள் அல்லது பண்பாட்டுத் தொடர்ச்சிகள் யுத்தம் முதலியவற்றாற் சிதறிப் போனமை முதலான உள்ளூர் நிலவரங்களும் சேர்த்து மேற்படி கட்டடங்கள் , அவற்றின் முகப்புக்கள் என்பவற்றின் நீடித்த இருப்புக்கு அச்சுறுத்தலாயுள்ளன. இவ்வகையில் பின்வரும் காப்பு நடவடிக்கைகள் எமக்கு அவசியமாகின்றன.

- மரபுரிமை தொடர்பான சமூக விழிப்பூட்டற் தொடர் செயற்பாடுகள் ஊடாக சமூகத்தை மரபுரிமை சார்ந்த விடயங்களில் பங்குதாரராக்கல்
- சரியான காப்புப் பேணுகை (conservation and preservation Methods) நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்

- அவற்றை உடைத்தல் - திருத்தல் உட்பட்ட அனைத்தும் அரசின் நிபுணர் குழுவின் சிபாரிசின் பெயரில் நிகழ்தப் படவேண்டும்.
- இத்தகைய கட்டடங்களைத் தகுந்த அனுமதிக்கப்பட்ட பொறிமுறையின் கீழ் சீரமைத்து அரச அலுவலங்களாகப் பேணலாம்
- ஆவணப்படுத்தல் - எண்மியமுறை (digital) முறை தொடக்கம் அளவுத்திட்ட வரைவுகள் (measure drawings),ஒளிப்படங்கள் முதலான பல்வேறு முறையிலும் அக்கட்டுமானங்களை ஆவணப்படுத்த வேண்டும்.